பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

14.09.2016 - மலர் 13, இதழ் 29

புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்





## நாடாளுமன்றத்தின் உள்ளே...

விலை ரூபா 15/-

## நைல் நதி நாகரிகம்



## அநுராதபுர யுக மன்னர்கள்



## ஈரானின் இரத்த ஏரியின் மர்மம்



மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீறிட்ட இடத்தை நிரப்புக.



1. அந்த ...................... எலும்பினை விரும்பி உண்ணும்.



2. ...................... வசிப்பிடம் ...................... ஆகும்.



3. ...................... அருகே ...................... காணப்படுகின்றது.



4. பசு ...................... மேயும்.



5. அந்தச் ...................... விருப்பமான விளையாட்டு ...................... ஆகும்.

---

1. இந்த பஸ் எங்கே செல்கின்றது?

..............................................

2. பஸ்ஸை ஓட்டிச் செல்பவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?

1. விமானி 2. பஸ் நடத்துனர் 3. சாரதி




3. பஸ்ஸில் ஏறுவதற்கு எத்தனை பிள்ளைகள் ஆயத்தமாக உள்ளன?

..............................................

4. நீங்கள் பாடசாலைக்குச் செல்லும்போது எடுத்துச் செல்கின்ற உபகரணங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

..............................................

---

1. சாக்குப் பையிலிருந்து கீழே கொட்டப்பட்டிருப்பவை யாவை?

1. பழங்களும் விளையாட்டுப் பொருட்களும்
2. பணமும் மரக்கறி வகைகளும்
3. பழங்களும் மரக்கறிகளும்






2. தமது பொருட்களை விற்பதற்காக பல்வேறு வியாபாரிகள் ஒன்று சேருமிடம்;

1. கடை 2. சந்தை 3. கடலோரம்

3. படத்தில் காணப்படாத பழங்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.


..............................................

4. நீங்கள் விரும்பி உண்ணும் மரக்கறிகள் எவை?

..............................................

---

திரு.வோல்ட்டரின் குடும்ப அங்கத்தவர்களையே படத்தில் காண்கின்றீர்கள்.




1. வோல்ட்டரின் பேரப்பிள்ளைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

..............................

..............................

2. வோல்ட்டரின் மனைவியின் பெயர் யாது?

..............................................

3. வோல்ட்டருக்கு எத்தனை பிள்ளைகள்?

..............................................

4. ஜெனிஃபர், டிம்மியின் பெற்றோர் யாவர்?

..............................................

-ஜீநு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் பேசுதல் என்பது, சமூகத்தில் அனைவரிடத்திலும் பொதுவாகக் காணப்படும் ஒரு தீய பண்பாகும். பொய் பேசுதல் ஒரு தீய பழக்கமாகவும் கருதப்படுகின்றது. ஒருவர் பாவம் செய்வதற்கு அஞ்சாமையும், பாவம் - புண்ணியம் பாராமல் செயற்படுவதும் அவரை பொய் கூறுவதற்கு வழியமைக்கும் காரணங்களாக அமைகின்றன. உண்மையில் இதுவோர் ஆன்மீக ரீதியிலான குறைபாடாகவே கருதப்படுகின்றது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652





# பொய் பேசுவதைத் தவிர்ப்போம்



'பொய்' என்பது என்ன? என்று சிந்தித்துப் பாருங்கள். இல்லாத ஒரு விடயத்தினை இருப்பதாகக் கூறுவது பொய்யாகும். நடைபெறாத ஒரு விடயத்தினை நடந்ததாகக் கூறுதல், பார்க்காத ஒரு விடயத்தினைப் பார்த்ததாகக் கூறுதல் என்பன பொய்யின் தன்மைகளாகும். பொய் பேசுவதனாலும் பொய்யான விடயங்களை எழுதுவதனாலும் சிலர் ஏமாற்றப்படுகின்றனர்.

நீங்கள் பிறரால் ஏமாற்றப்பட்டால், உங்கள் உணர்வு எவ்வாறு இருக்கும்? மற்றவர்கள் உங்களிடம் பொய் கூறினால், நீங்கள் அதனை எப்படி உணர்வீர்கள்? இவையெல்லாம் நிச்சயம் உங்களை மனதளவில் பாதிக்கும் விடயங்களாகும். அப்படியாயின், நீங்கள் மற்றவர்களுக்கு பொய் கூறினால், அவர்களும் அதே பாதிப்புகளைத்தானே எதிர்கொள்வார்கள். ஆக, இதனை உணர்ந்து செயற்படும் எவரும் பிறரிடத்தில் பொய் பேச மாட்டார்கள்.


பொய் பேசக் காரணம், மனதில் உள்ள தீய உணர்வுகளே. எம்மால் செய்யப்படும் பாவச் செயல்களில் பொய் பேசுதல் பிரதானமானதொரு பாவச் செயலாகவே கருதப்படுகின்றது. அவ்வாறே, மற்றவர்களை பொய் கூற தூண்டுவது பாவமாகும். இங்கு பொய் கூறியவர்களும் மற்றவர்களின் தூண்டுதல் காரணமாக, பொய் கூறுபவர்களும் பாவம் செய்பவர்களாகவே கருப்படுகின்றனர்.

மனிதர்கள் ஏன் பொய் பேசுகின்றனர் என்று சிந்தித்துப் பாருங்கள். தற்காலிக நன்மைகளுக்காகவும் அற்ப விடயங்களுக்காகவுமே பொய் பேசுகின்றனர்.

அதுவே, நாம் நேர்மையாக வாழ்வோமானால் பொய் பேச வேண்டிய தேவை ஏற்படாது. இந்த உலகில் வாழ்ந்த மகான்கள் அனைவரும் பொய் பேசுதலை பெரும் பாவமாகவே கருதியுள்ளனர். பல பொய்களைக் கூறி கோடிக்கணக்கில் பணம் உழைப்பவர்கள், மற்றவர்களை இழிவுபடுத்துவதற்காக பொய் பேசுபவர்கள், திட்டமிட்டு பொய்களை பிரசாரம் செய்பவர்கள், பொய் பிரசாரங்களை செய்து ஆட்சியைப் பிடிப்பவர்கள் என பொய்யான விடயங்களுக்கே தமது வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்பவர்கள், எப்போதேனும் தமது உண்மைநிலை வெளிப்படும் பட்சத்தில், தமது பாவச் செயலுக்கான பிரதிபலனை அனுபவிப்பார்கள் என்பது சான்றோரின் கருத்தாகும்.

எனவே, பொய் பேசும் பழக்கத்தினை சிறு வயது முதலே கைவிட்டிடுங்கள். பொய் பேசுபவர்களிடமிருந்து விலகியிருங்கள். எப்பொழுதும் உண்மை, நேர்மை போன்ற சிறந்த பழக்கங்களைப் பின்பற்றுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மை செய்



ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் அவருடைய மாளிகையின் வாயிலில் ஒரு வயதான பிச்சைக்காரன் வந்து, "ஐயா! ஏதேனும் உதவி செய்யுங்களேன்" என்று கையேந்தி வேண்டினான். "இது ஒரு பிழைப்பா? உழைத்துச் சாப்பிடு போ" என்று விரட்டிவிட்டார் செல்வந்தர். மனம் நொந்த பிச்சைக்காரன் சென்றுவிட்டான்.

சில நாட்களின் பின்னர், ஒருநாள் செல்வந்தர் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். வேட்டையை முடித்துவிட்டு வீடு திரும்பும்போது வழி தவறிவிட்டார். பல மணிநேரம் அலைந்து வழி ஒன்றும் தெரியாது தவித்தார் செல்வந்தர். அத்தோடு, அவருக்கு பசியும் வாட்டியது. இரவாகியபோதும் அவரால் தன் ஊரிற்கு செல்லும் வழியை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், சிறிது தொலைவில் ஒரு ஏழையின் குடிசை இருந்ததை செல்வந்தர் கண்டார். அந்தக் குடிசையை நோக்கிச் சென்றார். அந்த குடிசைக்குள் சென்றபோது, நன்கு இருள் சூழ்ந்து இருந்தமையால் குடிசையில் இருந்த நபரை செல்வந்தரால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

குடிசையில் இருந்த ஏழை அவரை வரவேற்று உபசரித்தார். இரவு உணவளித்து செல்வந்தரை குடிசையில் தங்க வைத்தார்.

பொழுது விடிந்தது, தன்னை உபசரித்த வறியவனைப் பார்த்தார் செல்வந்தர். வெட்கித் தலை குனிந்தார்; காரணம் தன்னால் விரட்டியடிக்கப்பட்ட பிச்சைக்காரன் தான் அந்த ஏழை என்பதைக் கண்டு தலை கவிழ்ந்தார்.

அந்த செல்வந்தர் நல் எண்ணத்தோடு ஏழையை நோக்கி, "ஐயா! தீமை செய்தார்க்கும் நன்மை செய்யும் உயர்ந்த உள்ளம் தங்களிடம் தான் உள்ளது. இனிமேல் என் இல்லம் நாடி வருவோருக்கு 'இல்லை' என்று கூறாது உதவி செய்வேன். அன்று தங்களிடம் இழிவாக நடந்துகொண்டமைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் உயர்ந்த உள்ளத்தை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை" என்று கூறிவிட்டு ஏழையிடம் விடைபெற்று சென்றார் செல்வந்தர்.

# சுயநலம்



ஒரு வணிகன் தன் வியாபாரத்திற்காக பக்கத்து ஊருக்கு செல்லவேண்டி இருந்தது. வணிகனிடம் இருக்கும் பொருட்களை ஏற்றிச் செல்ல தன் ஒரு கழுதை போதாதே என்று நினைத்தான். அதனால், தன் நண்பனின் கழுதையை கேட்டு வாங்கினான்.

வியாபாரத்திற்காக புறப்பட்ட வணிகன் தன்னுடைய கழுதைமீது பஞ்சு முட்டையையும் நண்பனின் கழுதை மீது உப்பு முட்டையையும் ஏற்றினான். வணிகன் உப்பு முட்டையை ஏற்றிய கழுதை நடக்க முடியாது மிகவும் சிரமப்பட்டு வந்தது. பஞ்சு முட்டையை சுமந்து வந்த கழுதை அதனை கேலி செய்துகொண்டே சென்றது.

திடீரென்று வானம் இருண்டது. பலத்த மழை பெய்யத் தொடங்கியது. இரண்டு கழுதைகளும் மழையில் நடந்துகொண்டே சென்றன. மழை நீரால் முட்டைகள் நனைந்தன. முட்டையிலிருந்து உப்பு மழை நீரால் கரைந்து ஓட தொடங்கியது. ஆனால், பஞ்சு முட்டை, மழை நீரை உறிஞ்சிக்கொண்டது. அதனால், பஞ்சு முட்டை எடை மிகவும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

எடை அதிகரித்த பஞ்சு முட்டையின் பாரத்தைத் தாங்க முடியாத வணிகனின் கழுதை வலியால் துடித்தது. அடியெடுத்துக்கூட வைக்க முடியாமல் தடுமாறியது. ஊரை அண்மித்த வேளை வணிகனின் கழுதை முதுகெலும்பு முறிந்து கீழே விழுந்தவுடனேயே இறந்தது. உப்பு முட்டை சுமந்த கழுதை பாரம் எதுவுமின்றி ஊரை அடைந்தது.


"நண்பனின் கழுதைக்கு அனைத்து சுமையையும் கொடுத்து, தன் கழுதையை நலமாக இருக்க வேண்டும் என்று எண்ணிய என் சுயநலத்தால் எனக்கே வினையை தேடிக்கொண்டேனே" என்று எண்ணி வணிகன் கவலையுடன் வீடு வந்து சேர்ந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Unilever

# கடந்த சில நாட்களுக்கு முன் பெற்றுக் கொண்ட கனவுகள் சில...



சிறுவர்களின் கனவுகள் மிகவும் வித்தியாசமானவை அவை சுயநலமற்றவை நற்குணங்கள் நிறைந்தவை இவ்வகையான கனவுகளை தேடிச்செல்வதற்காகவே நாம் வண்ணங்களோ வர்ணங்களோ அற்ற அஸ்ட்ரா டப்களை உருவாக்கியுள்ளோம். உங்கள் பிள்ளைகளின் இவ்வாறான கனவுகளை இந்த டப்பில் வரைய சொல்லுங்கள், சுயநலமற்ற அக்கனவுகளை நனவாக்கி நற்குணங்களால் நிறைந்த ஓர் அழகிய இலங்கையை நாம் உருவாக்குவோம்.












WP/GT/4637

விலை
ரூ.200/-




மேலதிக விபரங்களுக்கு இக் QR CODE ஐ ஸ்கேன் செய்யுங்கள்


www.facebook.com/AstraSrilanka

*நிபந்தனைகளுக்குட்பட்டது

1323

செப்டெம்பர் 15ம் திகதிக்கு முன்னர் த.பெ.இல.821, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். | அதை டப்பில் ஒட்டுங்கள் | உங்கள் பிள்ளைகளின் கனவுகளை இதனுள் வரைய சொல்லுங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அநுராதபுர

அநுராதபுர யுகத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் மக்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்போடு செயல்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களில் தனித்துவம் நிறைந்த சில மன்னர்கள் குறித்து இங்கு ஆராய்வோம்.

## பண்டுகாபய மன்னன் (கி.மு. 5 ஆம் நூற்றாண்டு)

இவர் முழு இலங்கையையும் ஆளாவிட்டாலும் அநுராதபுரத்தை தலைநகராக்கிய முதலாவது ஆட்சியாளர் எனவும் நாட்டின் கிராமங்களின் எல்லைகளை வகுத்ததாகவும், அமைப்பு ரீதியான நிர்வாக இயக்கத்தை தோற்றுவித்ததோடு, 'மகா மேகவனம்' எனும் பூங்காவையும் அபயவாவியையும் உருவாக்கியதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேவநம்பிய தீச மன்னன் (கி.மு. 250-210)


இலங்கையில் தேவநம்பிய தீசனின் ஆட்சிக்காலத்தில் அரசியல், சமய, சமூக, பொருளாதார பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலப் பகுதியில்தான் இலங்கைக்கு மகிந்த தேரரும் சங்கமித்தை பிக்குனியும் வருகை தந்ததோடு, இலங்கையில் பௌத்த மதம் நிறுவப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதன்போது, தூபராமை விகாரையும் 'ஜெய ஸ்ரீ மகா போதி' உள்ளிட்ட பல வழிபாட்டுத் தலங்கள் உருவாகின. தேவநம்பியதீசன் வர்த்தகத் துறையையும் நீர்ப்பாசனத்தையும் விவசாயத்தையும் அபிவிருத்தி செய்தான். வலஸ்குளம், திஸ்ஸ வாவி என்பன இவரின் நிர்மாணங்களாகும்.

## மன்னன் எல்லாளன் (கி.மு. 205-161)

இந்தியாவிலுள்ள சோழ நாட்டிலிருந்து பெரும்படையுடன் இலங்கை வந்த மன்னனே எல்லாளன் ஆவான். அநுராதபுரத்தில் அப்போது ஆட்சியாளனாக இருந்த தேவநம்பிய தீசனின் இளைய சகோதரனாகிய அசேலனை தோற்கடித்து அரசாட்சியை எல்லாளன் கைபற்றிக்கொண்டான். இவரின் ஆட்சிமுறை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதியான ஆட்சியாகும்.

இலங்கையின் முக்கிய வரலாற்று நூல்களான மகாவம்சம் மற்றும் தீபவம்சம் போன்றவைகளிலும் எல்லாளனின் நீதி வழுவா ஆட்சிமுறையை பற்றி சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றது. எல்லாளனது ஆட்சி 44 ஆண்டுகள் வரலாற்றில் அழிக்க முடியாத ஆட்சிக் காலமாகும்.





## துட்டகைமுனு மன்னன் (கி.மு. 161-137)

எல்லாளனுடன் யுத்தம் புரிந்து அநுராதபுரத்தைக் கைப்பற்றிய துட்டகைமுனு முழு நாட்டையும் ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவந்த முதல் மன்னனாக கருதப்படுகிறான். ருவன்வெலி மகாசாய, லோவமஹாபாய, மிரிசவெட்டி போன்ற விகாரைகளை அமைத்து பௌத்த மதத்திற்கு பெருந்தொண்டாற்றிய துட்டகைமுனு விவசாய அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டான்.

## சத்தாதீச மன்னன் (கி.மு. 137-119)

துட்டகாமினியின் பணிகளை பல வகைகளில் நிறைவு பெறச் செய்தவன் அவனது தம்பியான சத்தாதீசனாவான். பௌத்த மதப் பற்று மிக்க இவன் 18 ஆண்டுகளாக இலங்கையை ஆட்சி செய்தான்.




## வலகம்பா மன்னன் (கி.மு. 103, 89-77)


கி.மு. 103 இல் சத்தாதீசனின் இளைய மகனாகிய வலகம்பா (வட்டகாமணி) ஆட்சியின்போது அரசியல், சமயம் ஆகிய இரு துறைகளிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இவனது ஆட்சிக் காலத்தில் தென் இந்தியாவிலுள்ள பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலஹத்தன், பாகியன், பனையமாறன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுக மன்னர்கள்






**க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது**

பிளையமாறன், தாடிகன் உள்ளிட்ட தமிழ்ப் பிரதானிகள் தலைமையிலான போரின் போது வட்டகாமணி தோற்கடிக்கப்பட்டான். இலங்கையைக் கைப்பற்றிய தமிழ் பிரதானிகளில் ஒருவர் பின் ஒருவராக 14 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இவர்களின் இறுதி மன்னனாகிய தாடிகனின் ஆட்சியின் போது, வட்டகாமணி போர் புரிந்தார். இதன்போது தாடிகனைத் தோற்கடித்து மீண்டும் ஆட்சியை வலகம்பா மன்னன் கைப்பற்றிக்கொண்டான். எனவே, வலகம்பா மன்னன் முதலில் கி.மு.103 இலும் அதன் பின் கி.மு. 89-77 என 13 வருடங்கள் ஆட்சி செய்தான். இலங்கை வரலாற்றிலேயே, அதிக சிரமங்களுக்கு முகம் கொடுத்த மன்னனாக வலகம்பா வரலாற்றில் பதியப்பட்டுள்ளான். அநுராதபுர யுகத்திற்குரிய 1400 வருடங்களில் ஏற்பட்ட ஒரே ஒரு கொடிய பஞ்சம், வலகம்பாவின் ஆட்சிக்காலத்திலேயே நிகழ்ந்துள்ளது.



### வசபன் மன்னன் (கி.பி. 67-111)

இலம்பகர்ண அரச மரபின் முதல் மன்னனாக விளங்கியவன் வசபன் மன்னன் ஆவான். இலங்கை வரலாற்றில் கிராமக்குளம், சிறிய குளங்கள் என இருந்த நிலையை மாற்றி பெருங்குளங்களை முதலில் அறிமுகப்படுத்திய மன்னன் வசபனே ஆவான். இவனுடைய ஆட்சி மிக நீண்டதும் அமைதி நிறைந்ததுமாக இருந்தது. 44 வருட கால இவனது ஆட்சியில் 11 குளங்கள் 12 கால்வாய்களை கட்டினான். இவன் கட்டிய குளங்களில் மகாவிலச்சி, மானாகெட்டிய, நொச்சி பொத்தான, ஹிரிவடுன்ன, எருவாவி என்பன முக்கியமானவையாகும்.



### மகா சேனன் மன்னன் (கி.பி. 276-303)

அநுராதபுர யுகத்தில் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தில் பாரிய குளங்கள் பலவற்றை மகாசேனன் மன்னனே கட்டினான். நீர்ப்பாசனத்துறைக்கு அவன் ஆற்றிய அளப்பரிய சேவையின் காரணமாக, மக்கள் அவனை தெய்வமாக எண்ணினர். ஜெத்தவன விகாரை, கோகண்ண விகாரை, மின்னேரி விகாரை என்பனவற்றையும் மகாசேனன் மன்னன் கட்டினான்.

மகாசேனன் கட்டிய குளங்களில் மின்னேரிய, மாகல்ல, கவுடுலு, மாமிணியாவ, ஹுலுகல்ல, நிராமுல்ல, மகா கல் கடவள என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவர் 16 பெருங்குளங்களையும் பம்பதென்ன கால்வாய் உள்ளிட்ட பல கால்வாய்களையும் உருவாக்கினான்.

### முதலாம் அக்ரபோதி மன்னன் (கி.பி. 575-608)

மகாவலிகங்கையை இடைமறித்து, மினிப்பே, எனும் இடத்தில், மணிமேகலா, எனும் பாரிய அணைக்கட்டை இவன் ஆரம்பித்தமையால் இவனது ஆட்சிக்காலம் மிக முக்கியத்துவம் பெறுகிறது. கிரிதலே வாவி, கந்தளாய் குளம், வலாஹஸ்ஸ குளம் என்பன இவன் அமைத்த குளங்களே ஆகும். அத்தோடு, இரண்டாம் சேனன் (கி.பி 853-887) மணிமேகலா அணைக்கட்டை பூர்த்தி செய்தமையால் முக்கிய ஆட்சியாளனாக கருதப்படுகின்றான்.

### மன்னன் தாதுசேனன் (கி.பி 469-477)

மன்னன் தாதுசேனன் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக அர்ப்பணிப்போடு செயல்பட்ட மன்னர்களில் ஒருவன். இவன் கலாவெவ உள்ளிட்ட 18 பெரிய குளங்களையும் சிறிய குளங்கள் பதினெட்டினையும் கட்டி நீர்ப்பாசனத்துறைக்கு அரும்பணியாற்றினான். தாது சேனனின் நீர்ப்பாசன முயற்சியில் ஜயகங்கை (யோத எல) பெரும் பங்கு வகித்தது. புத்தசாசன முன்னேற்றத்திற்காக தக்பிணிகிரி, வடுன்னா, கலாவாவி உள்ளிட்ட 18 மகா விகாரைகளை கட்டினான். அவுகன புத்தர் சிலையும் இவனது ஆட்சிக்காலத்திற்குரியது என்பது குறிப்பிடத்தக்கது.



மேற்குறித்த மன்னர்களைத் தவிர காசியப்பன் மன்னன் (கி.பி 477-495) 'சீகிரிய' எனும் அற்புத அமைப்பை உருவாக்கியமையால் அதிகம் பேசப்படும் ஒரு மன்னனாகத் திகழ்கின்றான்.

மேற் குறிப்பிட்ட மன்னர்களால் மேற்கொள்ளப்பட்ட அரும் பணிகள் பல இன்றும் பயன்பாட்டுக்குரியதாக இருப்பதால் இன்றும் மக்கள் அம் மன்னர்களை நினைவு கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ..............................................

**1. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

**01. வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் களைப்பூண்டு எது?**

1. மூக்குத்திப் பூண்டு 2. நன்னாரி
3. சீதேவியார் செங்கழுநீர் 4. வெடிபலவன்

**02. வேர்க்கொம்பு எனும் மூலிகை எத்தாவரத்தில் இருந்து பெறப்படுகிறது?**

1. இஞ்சி 2. திப்பிலி 3. மஞ்சள் 4. தூதுவளை

**03. கூட்டம் கூட்டமாக உணவு தேடிச் செல்லும் பறவை எது?**

1. மைனா 2. கிளி 3. செண்பகம் 4. கழுகு

**04. இலங்கையிலுள்ள எல்லா இன மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் தேசிய விழா யாது?**

1. புத்தாண்டு விழா 2. சுதந்திர தின விழா
3. தைப்பொங்கல் விழா 4. வெசாக் விழா

**05. இலங்கையின் மிக நீளமான ஆறு எது?**

1. களனி கங்கை 2. நில்வளா கங்கை
3. மகாவலி கங்கை 4. மாணிக்க கங்கை

**06. இலை, வேர், பூ, காய், பழம் என்பன மூலிகையாகப் பயன்படும் தாவரம் எது?**

1. குறிஞ்சா 2. வட்டுக்கத்தரி
3. ஆமணக்கு 4. இஞ்சி

**07. தூயநீரில் அமிழக்கூடிய பொருள் யாது?**

1. பலகை 2. ரெஜிஃபோம் 3. ஆணி 4. இலை

**08. உலகில் மிகவும் சுத்தமான நன்னீர் யாது?**

1. மழைநீர் 2. குளத்துநீர்
3. ஆற்றுநீர் 4. கிணற்றுநீர்

**09. வாகனத்தில் இருந்து வெளியேறும் கருமை நிறமான புகையை சுவாசிப்பதால் ஏற்படக்கூடிய நோய்;**

1. கொள்ளை நோய் 2. பிடிசுரம்
3. இருமல் 4. நுரையீரல் நோய்

**10. நாய்கள் வயிற்றுக் கோளாறு ஏற்படும்போது உண்ணும் தாவரம் யாது?**

1. குப்பைமேனி 2. மஞ்சள்
3. தொட்டாச்சுருங்கி 4. பால் அறுகு




**2. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

01. எண்ணெய் எடுக்கப்படும் தாவரங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

1. .............................. 2. ..............................

02. கிராமிய மக்களின் நடனங்களில் ஒன்று தருக.

..........................................

03. நச்சுத் தன்மையற்ற ஆரோக்கிய சமையலுக்கு உகந்த பாத்திரம்;
..........................................

04. மூலிகைக்காகப் பயன்படும் தாவர இலைகள் 2 தருக.

1. .............................. 2. ..............................

05. எளிய பொறிகள் இரண்டு தருக.

1. .............................. 2. ..............................

**3. பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✕) எனவும் குறிப்பிடுக.**

01. அதிகளவு புரதம் கொண்ட உணவு முட்டை ஆகும். (---)

02. கொன்டிஸ்ஸை நீரில் இடும்போது அது ஊதா நிறமாக மாறும். (---)

03. அயடீன் கலந்த உப்பையே நாம் பயன்படுத்த வேண்டும். (---)

04. வாயிலிருந்து சுரக்கும் சுரப்புமூலம் கூடு அமைக்கும் பிராணி தேனீ ஆகும். (---)

05. அசுத்த நீரில் அதிகளவில் கிருமிகள் காணப்படும். (---)

06. இரை மீட்கும் விலங்குகளில் ஆடு முதலிடம் வகிக்கும். (---)

07. மூடு தாவரங்களால் மண்ணரிப்பு தடுக்கப்படும். (---)

08. பச்சையாக உண்ணும் உணவுகளை உப்பு நீரில் கழுவுதல் சிறந்தது. (---)

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

### கணிதம், தமிழ்

(செப்டெம்பர் 7 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 06. 2 | 11. உளவு | 16. 3 |
| 02. 2 | 07. 1 | 12. குளம் | 17. 1 |
| 03. 1 | 08. 3 | 13. மைதானம் | 18. 2 |
| 04. 3 | 09. 4 | 14. 2 | |
| 05. 3 | 10. 2 | 15. 2 | |

Digitized by Noolaham Foundation.

# டொங்கா

தென் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள பல தீவுகளைக் கொண்ட நாடாகும். கி.மு. 1500ஆம் ஆண்டளவில் இத்தீவுகளில் மக்கள் குடியேறினர். கி.பி 1700 ஆம் ஆண்டின் பின் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அதன்பின்னர் 1970 இல் பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் அடைந்தது.








இலங்கை நாடாளுமன்றக் கட்டடத்தின் வெளிப்புறத் தோற்றத்தை பலரும் பார்த்திருப்பீர்கள். ஆனால், அதன் உள்புறம் அமையப்பெற்றுள்ள சில சிறப்பம்சங்களை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். அத்தகைய சிறப்பு அம்சங்கள் பற்றிய சில விபரங்கள் வருமாறு...

## சபா மண்டபக் கதவு



நாடாளுமன்ற சபாமண்டபத்தின் பிரதான வாயில் கதவானது, நேர்த்தியாக செப்பினாலானதும் வெள்ளி மென் பூச்சைக் கொண்டது மாகும். 12’x12’ அளவுடைய இக்கதவு வியக்கத்தக்க முப்பரிமாணத் தோற்றத்தையுடையது. புராதன கல்வெட்டுப் பாணியில் இலங்கை அரசியலமைப்பின் பாயிரம் (முகவுரை) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் ஓரங்களில் புராதன இலங்கையின் கலைகளைச் சித்தரிக்கும் கவர்ச்சியான தாமரை வடிவங்களும் அலங்கார மலர் வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன.

## இருக்கை வசதி

சபா மண்டபத்தினுள் உறுப்பினர்களுக்கான இருக்கை இடவசதியானது, படிப்படியாக உயர்ந்து செல்லக்கூடியவாறு சரிவான வடிவில் மேசைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. வளிச் சீராக்கம் செய்யப்பட்டுள்ள சபா மண்டபம் 232 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான இருக்கைகளைக் கொண்டுள்ளதால் அமைப்புத் திருத்தம் எதுவும் செய்யப்படாமல் மேலும் 16 பேரை உள்ளடக்கக் கூடிய வசதியும் உண்டு. அரசியலமைப்பின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு வருடங்களுக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பர்.



செவ்வக வடிவான சபாமண்டபம், முழுக் கட்டடத்தினதும் மையப்பகுதியில் இரண்டு மாடிகளின் உயரத்தை உள்ளடக்குகின்றது. மன்னர்களினதும் கோவில்கள் மற்றும் கோறளைகளினதும் கொடிகள், விருதுகள், பதாகைகள் என்பன 18 வெள்ளிக் கொடிகளாக, கறையற்ற உருக்கிலான கம்பங்களில் அலங்காரமாகக் காட்சியளிக்கின்றன. சபாமண்டபத்துக்கு மேல்புறம் ஓர் அகல் வட்டத்தில் ஏழு அடி உயரம் கொண்ட இலங்கையின் தேசிய சின்னமும் காணப்படுகின்றது. குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் கூடியதாக சபாமண்டபம் 232 ஆசனங்களைக் கொண்டுள்ளதோடு, இவ்வாசனங்கள் சபாநாயகரின் ஆசனத்திற்கு இருபுறமும் 116 ஆசனங்கள் வீதம் வைக்கப்பட்டுள்ளன.



சபா மண்டபம்

சபாமண்டபத் தென்கோடியின் நடுப்பகுதியில் சபாநாயகரின் ஆசனம் வைக்கப்பட்டுள்ளது. அடுத்து கீழாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோருக்கான மேசை காணப்படுகின்றது. சபாமண்டப எல்லைக்கு வெளியே சபாநாயகரது ஆசனம் தென்படக் கூடிய வகையில் படைக்கலச் சேவிதர் மற்றும் பிரதிப் படைக்கலச் சேவிதரின் ஆசனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், சபாமண்டபத்தின் கீழ்ப்பகுதியில் சில விசேட நோக்கங்களுக்கான கூடங்கள் உள்ளன. ஹன்சாட் அலுவலர்களுக்கான கூடமும், நாடாளுமன்ற நிர்வாக அலுவலர்களுக்கான கூடமும், முறையே அக்கிராசனத்துக்கு வலப்புறமாகவும் இடப்புறமாகவும் உள்ளன.

சபாநாயகரின் ஆசனமானது 1949 ஜனவரி 11 ஆம் திகதி பெரிய பிரித்தானியாவின் பொதுமக்கள் சபையினால் இலங்கை பிரதிநிதிகள் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதொன்றாகும். இவ்வாசனம், தூய ஆங்கிலக் கருவாலி (English Oak) மரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 200




## சபாநாயகரின் ஆசனம்

வருடங்கள் பழமையானதெனவும் அறிவிக்கப்படுகின்றது. இது இரண்டாம் உலக யுத்தத்தின்போது, சேதமடைந்த உத்தரத்தின் ஒரு பகுதியைக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. ஆறு அடி உயரமான இவ்வாசனம் இலை வடிவங்கள் செதுக்கப்பட்டு பொன் மெருகிடப்பட்டுள்ளது. அதன் மேற்பகுதிக்குச் சற்றுக் கீழே, தோலிலான உறையில் வாளேந்திய சிங்கம் பொறிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மன்றத்தின் உள்ளே...

## சபையின் தடை எல்லை



பிரதான நுழைவாயிலில் இருந்து, சபாமண்டபத்தை அடைவதற்கான படிகளுக்குச் சற்று மேலாக, சபா மண்டபத்தின் நடுப்பகுதியில், செங்கம்பளம் விரிக்கப்பட்ட தரைக்குக் குறுக்காக, நீண்ட செவ்வக வடிவான, நிக்கல் பட்டியொன்று இடப்பட்டுள்ளது. அது சபையின் தடை எல்லையைக் குறிக்கின்றது. அந்த பட்டியின் முகப்பில், வீரம், நிலைபேறு, சுபீட்சம் என்பவற்றின் பாரம்பரியமான, சிக்கலான வடிவமைப்பைக் கொண்ட சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சபை உத்தியோகத்தர் தவிர்ந்த வேறு எந்தவொரு நபரும் இத்தடை எல்லைக்கு அப்பால் செல்ல முடியாது. சபாமண்டபத்தினுள் சபாநாயகர் வருகின்ற போது, செங்கோலைத் தாங்கிச் செல்லும் படைக்கலச் சேவிதரும், பிரதிப் படைக்கலச் சேவிதரும் தடை எல்லைக்கப்பால் அமர்ந்திருப்பர்.

## கெலரிகள்



சபா மண்டபத்தின் மேல் பகுதியில் பொது மக்கள் கெலரியும் பத்திரிகையாளர் கெலரியும் உள்ளன. சபாநாயகரின் ஆசனத்துக்கு நேரெதிரே 96 ஆசனங்களைக் கொண்ட சிறப்புப் பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட சபாநாயகரின் கெலரியும், சபாநாயகரின் ஆசனத்துக்கு மேலாக 64 ஆசனங்களைக் கொண்ட பத்திரிகையாளர் கெலரியும் அமைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக 450 பேர் அமரக்கூடிய பொது மக்களுக்கான மேலும் மூன்று கெலரிகளும் உள்ளன.

## செங்கோல்



நாடாளுமன்றத்தின் அதிகாரச் சின்னமாகத் திகழும் செங்கோல் 1949 ஆம் ஆண்டு பிரித்தானியப் பொதுச் சபையினால் இலங்கைப் பிரதிநிதிகள் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். அது 28 இறாத்தல் நிறையைக் கொண்டுள்ளதோடு 48 அங்குல நீளமுடையது. இச் செங்கோல், கருங்காலி மரத்தினால் செய்யப்பட்டு, வெள்ளி, 18 கரட் தங்கம், நீலமாணிக்கக் கற்கள் என்பவற்றினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தினதும், நாடாளுமன்றத்தினூடாக சபாநாயகரினதும் அதிகாரச் சின்னமாகச் செங்கோல் விளங்கி வருவதால், செங்கோல் இன்றி நாடாளுமன்ற அமர்வு இடம்பெற முடியாது. சபாநாயகர் சபாமண்டபத்திற்கு வருகை தரும்போதும், வெளியேறும்போதும், அவருக்கு முன்னே, படைக்கலச் சேவிதர் செங்கோலை ஏந்தியபடி செல்வார்.

(நன்றி: நாடாளுமன்ற இணையத்தளம்)




**கேள்வி:** உப்பு உற்பத்தியின்போது, பல தடாகங்களுக்கு கடல்நீரினை மாற்றிப் பின்னர் பெறப்படும் உப்பானது, நீரில் கழுவப்படுவது ஏன்?



**பதில்:** கடல் நீரில் அதிகளவான சோடியம் குளோரைட் எனப்படும் உப்பு அடங்கியுள்ளது. அத்தோடு, கல்சியம் காபனே, கல்சியம் சல்பேற் போன்ற குறைந்த அடர்த்திநிலை கொண்ட கனிம உப்புகளும் அடங்கியுள்ளன. முதலாவது தடாகத்தில் நீர் ஆவியாகும்போது கல்சியம் காபனேற், கல்சியம் சல்பேற் வெண்மைப் படிமமாகப் படியும்.இதன்போது இவற்றை அகற்றி கடல் நீர் இரண்டாவது தடாகத்திற்கு அனுப்பப்பட்டு ஆவியாக்கலின்போது, சோடியம் குளோரைட் படியும் செயற்பாடு ஆரம்பமாகும். அந்த திரவத்தினை மூன்றாவது தடாகத்தில் ஆவியாக்கல் செயற்பாட்டின் போது, சோடியம் குளோரைட் திண்மத்தன்மையினை அடையும். அதனுடன் கடல் நீரில் கரைந்திருக்கும் மக்னீசியம் குளோரைட், மக்னீசியம் சல்பேற் உப்புக் கட்டியின் மீது படியும். இந்த மக்னீசியம் உப்பு உவர்ப்புத் தன்மையினை ஏற்படுத்துகின்றது. இதனால், மக்னீசியத்தை அகற்றுவதற்காகவே கடல் நீரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட உப்பானது, நீரில் கழுவப்படுகின்றது.

**கேள்வி:** கயிறு உற்பத்தி தொழிலின் போது, முதலில் தேங்காய் நார்களை நீரில் ஊற வைப்பது ஏன்?



**பதில்:** கயிறு உற்பத்தியின் போது கயிறினை ஒன்றுக்கொன்று வேறுபடுத்திக் கொள்வது அவசியமாகும். ஆனால், தேங்காய் நாரில் நார்கள் நன்கு பிணைந்துள்ளன. அதனால், தண்ணீரில் தேங்காய் நார்களை ஊற வைக்கும்போது, அந்த நீரிலுள்ள பெக்டீரியாக்களின் இயக்கத்தினால் பெக்ட்டினேஸ் என்சைமம் உருவாகின்றது. இந்த என்சைமினால் நார்களை பிணைத்து வைத்திருக்கும் பெக்டின் பதார்த்தம் பிணைப்பினை தகர்த்துவிடுகின்றது. இதனால் இலகுவாக தேங்காய் நார்கள் விலகி விடும், அதன் பின்னர் கயிறு உற்பத்தியை மேற்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைல் நதி

நைல் நதிப் பள்ளத்தாக்கு, கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. விக்டோரியா ஏரியில் ஆரம்பித்து எகிப்து நாட்டின் மத்திய பகுதியூடாகப் பாய்ந்தோடி, மத்திய தரைக்கடலில் சங்கமம் ஆகின்ற நைல் நதியின் கரையோரம், நைல் நதி நாகரிகத்தின் இதயமாகும். கி.மு. 6,000 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு குடியிருப்புகளை அமைத்துக் கொண்ட சுற்றுலாப் பயணிகளே, நைல் நதிப் பள்ளத்தாக்கின் ஆதிக் குடிகளாக கருதப்படுகின்றனர். அவ்வாறு தோன்றிய நைல் நதிப் பள்ளத்தாக்கின் குடியேற்றங்கள், பின்னர் படிப்படியாக விரிவடைந்தன. கி.மு. 3,000 ஆம் ஆண்டளவில் 'மெம்பீஸ்' நகரை தலைநகராகக் கொண்டு 'மெனஸ்' எனும் மன்னன் நைல் நதிப் பள்ளத்தாக்கில் அரசு ஒன்றைக் கட்டி எழுப்பினான். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி அடைந்த நைல் நதி நாகரிகம் பற்றி இந்த வாரம் நோக்குவோம்.




## நைல் பள்ளத்தாக்கின் ஆட்சி



நைல் நதி நாகரிகத்தின் மன்னர்கள் 'பாரோக்கள்' (Pharaohs) என அழைக்கப்படுகின்றனர். நிலத்தினதும் வளங்களினதும் ஆட்சியாளர்களாக இருந்த அவர்கள், ராணுவ கட்டளை அதிகாரிகளாகவும் திகழ்ந்தனர். இவர்களைத் தவிர; நில அளவை மற்றும் மேல் விசாரணை நடவடிக்கைகள், திறைசேரி நடவடிக்கைகள், கட்டட நிர்மாணத் திட்டம் போன்றவற்றை மேற்கொள்ள அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 'நொமென்ஸ்' என்ற பெயரில் அழைக்கப்பட்ட 42 நிர்வாகப் பிரிவுகள் இருந்தன.

## ஜீவனோபாயம்



மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் இருந்தது. கோதுமை, பார்லி முதலிய தானியங்களும்; திராட்சை, ஒலிவ், பேரீச்சை, தர்ப்பூசணி, தோடை, விளாம்பழம் ஆகிய பழ வகைகளும்; போஞ்சி, கோவா, சின்ன வெங்காயம் ஆகிய காய்கறிகளும் பயிரிடப்பட்டன. இவை தவிர, சணல்நார் கைத்தொழில், கட்டட நிர்மாணம், களிமண் பொருட்கள் தயாரிப்பு போன்ற பல்வேறு கைத்தொழில்களும் மேற்கொள்ளப்பட்டன.

## உணவுகள்

## இருப்பிடங்கள்



செல்வந்தர்களதும் ஏழைகளினதும் வீடுகள் வெவ்வேறு விதமாக இருந்தன. செல்வந்தர்களின் வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்ததோடு, பெரும்பாலானோரின் வீடுகள் இரண்டு மாடிக் கட்டடங்களாக இருந்தன. இந்த வீடுகளில் தங்கம் மற்றும் தந்தத்தாலான அழகிய வீட்டுச் சாமான்கள் நிறைந்திருந்தன. ஏழைகளின் வீடுகள் களிமண்ணாலும் களிசெங்கற்களாலும் கட்டப்பட்டிருந்தன.


## நம்பிக்கையும் வழிபாடும்



இந்த மக்கள் மத நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர். 'ரே' மற்றும் 'ஒசிரிஸ்' ஆகிய கடவுள்களை பிரதானமாக வழிபட்டனர். சூரியனும் முக்கியமானதொரு கடவுளாக கருதப்பட்டது. மரணத்திற்குப் பின்னரான வாழ்க்கையிலும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அரசர்கள் தாம் உயிருடன் வாழும்பொழுதே, தமக்கான கல்லறை வீடுகளை அமைத்தனர். அவை 'பிரமிட்' என அழைக்கப்பட்டன.

## எழுத்துக் கலை

## கட்டடக் கலையும் பொறியியல் துறையும்



மிகவும் முன்னேற்றகரமான தொழில்நுட்ப அறிவு இருந்தது. எகிப்திய பிரமிட்களின் நிர்மாணம் இதனை பறைசாற்றுகின்றது. பிரபுக்களின் மாளிகை மற்றும் தேவாலயங்களிலும் கட்டடக் கலைகளினதும் பொறியியல் துறையினதும் நிபுணத்துவம் பிரதிபலிக்கின்றதைக் காணலாம்.

## மருத்துவமும் கணிதமும்



இக்கால மருத்துவர்கள் சத்திர சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். இறந்த உடல்கள் பழுதடையாமல் பாதுகாக்கும் முறைகளையும் அறிந்திருந்தனர். வானவியல், கணிதம் ஆகிய துறைகளிலும் நைல் நாகரிக மக்கள் நிபுணத்துவம் பெற்றிருந்தனர்.

## வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரிகம்



## உணவுகள்




பல்வேறு விதமான உணவுகள் தயாரிக்கப்பட்டன. கோதுமையில் பாண் தயாரித்தனர். கி.மு. 2600 இல் கோதுமை ரொட்டியும் பார்லியிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒருவகை பானமும் மக்களின் பிரதான உணவுகளாக இருந்தன. திராட்சையில் இருந்து வைன் தயாரித்தனர்.




## ஆடை அணிகலன்கள்




நைல் நதியின் இரு புறங்களிலும் வளர்ந்த சணல் தாவரத்தில் இருந்து நாரைப் பெற்று, லினன் போன்ற நுண்ணிய துணிகள் நெய்து பல்வேறு ஆடைகளை தயாரித்துக்கொண்டனர். சமூக அந்தஸ்துப்படி, ஆடைகளின் வடிவமைப்பு மாறுபட்டது. தலைக்கவசம், பாதணிகள், தங்க-வெள்ளி நகைகள், ஆபரணங்கள் என்பனவற்றையும் அணிந்தார்கள். ஆண்களும் பெண்களும் வாசனை எண்ணெய்கள், நறுமணப் பொருட்கள், முகப்பூச்சுக்களையும் பயன்படுத்தினர்.

## எழுத்துக் கலை




இந்த நாகரிகத்தில் அறிமுகமான எழுத்துக்கள் 'ஹைரோக்ளிஃப்ஸ்' (சித்திர எழுத்துக்கள்) என வழங்கப்பட்டன. பெப்பிரஸ் இலைகளிலும் பிரமிட் மற்றும் தேவாலய சுவர்களிலும் இந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. வியாபார கொடுக்கல்-வாங்கல், விலங்கின வளம், விவசாய அறுவடை, வட்டி, வரி என்பனவற்றை ஆவணப்படுத்துவதற்காகவும்; கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்த அறிவை எழுதி வைப்பதற்காகவும்; மன்னர்கள் புரிந்த சேவைகளை எழுதி வைப்பதற்காகவும் சித்திர எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.

## கலைச் சிற்பம்




களிமண்ணால் பொருட்களைச் செய்வதும் அதற்கு வர்ணமூட்டுவதும் இந்த மக்களின் கைவந்த கலையாகும். கற்களால் சிற்பங்கள், சிலைகள் செய்தனர். பிரமிட் சுவர்களிலும் தேவாலய சுவர்களிலும் உள்ள சித்திரங்கள் அவர்களின் கலைப் படைப்புக்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.



## வர்த்தகம்




இக்காலத்தில் வர்த்தக கொடுக்கல்-வாங்கலில் நாணயங்கள் பயன்படுத்தப்படவில்லை. உள்நாட்டு வாணிபத்திலும் ஏற்றுமதியிலும் பண்டமாற்று முறைதான் பயன்பாட்டில் இருந்தது. தானியங்கள், உற்பத்திப் பொருட்கள், உப்பு ஆகியவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. தொழிலாளர்களுக்கான கூலியாக தானியங்களே வழங்கப்பட்டன.

## வீழ்ச்சி





எக்டியம் (Actium) யுத்தத்தில் ஒக்டாவியனிடம் மார்க் அந்தனி மற்றும் ஏழாம் க்ளியோபெட்ரா அரசி தோல்வி கண்டனர். அதன்பின் இந்த ராச்சியம், ரோமானியப் பேரரசின் ஆதிக்கத்திட்குட்பட்டது. பின்னர், படிப்படியாக நைல் நதி நாகரிகம் வீழ்ச்சி கண்டது.

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசியின் தொடர்பாடல் முறை

*கைத்தொலைபேசிகளின் தொடர்பாடல் மின்காந்த அலைகளின் வழியாகவே நிகழ்கிறது. இதன்போது அலைகளைப் பெறவும் அனுப்பவும் கோபுரங்கள் நிறுவப்படுகின்றன. கிராமப்புறங்களில் பல கி.மீற்றர் தொலைவிலும், நகரப்புறங்களில் அருகருகேயும் இக்கோபுரங்கள் நிறுவப்படும். நகரப்புறங்களில் கைத்தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதே, இதற்கான காரணமாகும்.*



கைத்தொலைபேசி தொடர்பாடலுக்குரிய Cell Site ஒன்று அமைக்கப் பட்டுள்ள விதம்.

## கைத்தொலைபேசி தொடர்பாடல் தொழில்நுட்பங்கள்

**01 GSM (Global System for Mobile Communications)**

ஐரோப்பிய தொலைத்தொடர்பாடல் தர நிர்ணய நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இது, இரண்டாம் தலைமுறை தொழில்நுட்பமாக (2G) கருதப்படுகின்றது. 1991 இல் ஃபின்லாந்தில் முதல் முறையாக இது பயன்படுத்தப்பட்டது.

**02 3GPP (Universal Mobile Telecommunications System)**

GSM தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு, 1998 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றாம் தலைமுறை (3G) தொழில்நுட்பமாகும்.

### பிரதான கோபுரம்

பிரதேச கோபுரத்திலிருந்து கிடைக்கும் சமிக்ஞை, பிரதான கோபுரத்தை அடையும். அழைப்பினை பெறுபவர் வேறு தொலைபேசி நிறுவன பாவனையாளராயின், அதற்குரிய கோபுரத்திற்கு சமிக்ஞை அனுப்பப்படும்.

### தொடர்புகொள்ளல்

அழைப்பை பெறுபவருக்கு மிக அருகாமையில் இருக்கும் Cell Site இல் இருக்கும் என்டெனாமூலம் அழைப்பு கையாளப்படும். அழைப்பின் போது, அதிர்வலைகள் மின்னலைகளாக மாறும்.

### சர்வதேச அழைப்பு

சர்வதேச அழைப்புகளின்போது, செய்மதி தொழில்நுட்ப உதவி பெறப்படும். வெளிநாட்டு அழைப்பின்போது, அழைப்பாளருக்கும் அழைப்பினை பெறுபவருக்கும் ஒலி அலைகள் வந்தடைவதில் தாமதம் ஏற்படுவது இதனால் ஆகும்.








கைத்தொலைபேசி சமிக்ஞைக் கோபுரங்களில் காணப்படும் என்டெனாக்கள் மற்றும் தொடர்பாடல் கருவிகள் பொருத்தப் பட்டுள்ள விதம்.

இந்த என்டெனாவிலுள்ள சேமிப்பகத்தில், பாவனையில் உள்ள சகல கைத் தொலைபேசிகள் பற்றிய தகவல்களும் அடங்கியிருக்கும். அதன்மூலம் அழைப்பை பெறுபவரின் இடத்தை அறிந்துகொண்டு, அதற்கருகேயுள்ள கோபுரத்திற்கு ரேடியோ அலைகள் மூலம் மின்னலைகள் அனுப்பப்படும்.





### பயணத்தின்போது...

பயணத்தின்போது அழைப்பை ஏற்படுத்தினால், ஒரு கோபுர எல்லையைக் கடக்கும் முன்னர் மறு கோபுரத்துடன் தொடர்புபடுமாயின் அந்த அழைப்பில் இடையூறு ஏற்படாது.

### எண்களை அழைத்தல்

கைத்தொலைபேசி எண்ணை அழைக்கும் போது, மறுமுனையிலுள்ள நபர் இருக்கும் இடத்திற்குரிய Cell Site இல் அமைந்துள்ள என்டெனாமூலம் அந்த சமிக்ஞை இனங்காணப்படும்.

என்டெனா மற்றும் தொடர்பாடல் சாதனங்கள் பொருத்தப்பட்ட ஒரு கோபுரம் அமைந்துள்ள இடம் Cell Site என்றழைக்கப்படும்.

### தொடர்பாடல் துண்டிக்கப்படல்

தொலைபேசி Cell Site இலிருந்து சமிக்ஞை கிடைக்கக்கூடிய எல்லையைத் தாண்டியிருப்பின் தொடர்பாடல் துண்டிக்கப்படும்.

### பெறுனர்

அழைப்பை பெறுபவரின் தொலைபேசியில் மின்னலைகள் ஒலி அதிர்வலைகளாக மாற்றமடையும்.

**03 LTE (Long Term Evolution)**

2005 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த தொழில்நுட்பம், வேகமான தரவுப் பரிமாற்றம் உட்பட, கைத்தொலைபேசிகளில் தொடர்பாடலுக்காக உருவாக்கப்பட்ட புதிய தொழில்நுட்பமாகும். நான்காம் தலைமுறை தொழில்நுட்பம் (4G) எனப்படும் இது, GSM, UMTS தொழில்நுட்பங்களுக்கமைய உருவாக்கப்பட்டுள்ளது.

## கைத்தொலைபேசியின் வளர்ச்சி

**1983 Motorola DynaTAC 8000X**
மார்ட்டின் கூப்பர் என்பவரால் தயாரிக்கப்பட்ட இதுதான், உலகிலேயே வர்த்தக ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது கைத்தொலைபேசி ஆகும்.

**1994 Simon Personal Communicator**
உலகின் முதலாவது PDA சாதனம் இதுவாகும். இதில், கணிப்பான், நாட்காட்டி, குறிப்பேடு என்பன அடங்கியிருந்தன.

**1996 Motorola StarTAC**
முதலாவது ஃப்லிப் கைத் தொலைபேசி.

**1999 Nokia 7110**
WAP (Wireless Application Protocol) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்ட முதலாவது தொலைபேசி இதுவாகும்.

**1999 Sharp J-SH04**
கெமரா வசதியுடைய முதலாவது கைத் தொலைபேசி. ஜப்பானில் அறிமுகமானது.

**2001 Kyocera QCP6035**
உலகின் முதலாவது வெற்றிகரமான ஸ்மார்ட் கைத்தொலைபேசி இதுவாகும்.

**2001 Panasonic P2101V**
வீடியோ கொன்ஃபரன்ஸ் வசதிகளுடன்கூடிய முதலாவது கைத்தொலைபேசி இதுவாகும்.

**2007 Apple iPhone**
தொடுகை திரை கொண்ட இந்த கைத் தொலைபேசியில் Wi-Fi இணைய வசதிகள் உண்டு.



4G தொழில்நுட்பத்துடனான apple iPhone கைத்தொலைபேசியொன்று.

-விபாகர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உலகவாழ் முஸ்லிம்கள் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற தருணம் இது. 'ஈதுல் அழ்ஹா' எனப்படும் தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளானது, இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகம், இறையச்சம், இறைநேசம், இறைவனுக்கு கட்டுப்படுதல் போன்ற பண்புகளை நினைவுகூரும் விதமாகவே உலக முஸ்லிம்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.



# துல் ஹஜ் மாதம் கற்றுத் தரும் படிப்பினைகள்

எனினும், அன்னாரின் இந்த பண்புகள் பற்றி அறிந்து, அவரைப் போற்றிச் சிறப்பிக்கும் நாம், துல் ஹஜ் மாதத்தில் மட்டும் அத்தகைய பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வதால் பலனில்லை. மாறாக, இப்றாஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கை முறையின்மூலம் எடுத்துக் காட்டப்படுகின்ற அனைத்து நற்பண்புகளையும் எமது முழு வாழ்க்கைக்குமான படிப்பினையாகவும் தத்துவமாகவும் கொண்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.


ஒரு முஸ்லிம் எப்படி வாழ வேண்டும்?, அவரது எண்ணங்கள்,பேச்சு, நடை, உடை, பாவனை போன்றவை எவ்வாறு இருக்க வேண்டும்?, இவற்றையெல்லாம் யாருக்காகச் செய்ய வேண்டும்? என்பதை துல் ஹஜ் மாதமும் இந்த மாதத்தில் கொண்டாடப்படுகின்ற ஹஜ்ஜுப் பெருநாளும் நமக்குக் கற்றுத் தருகின்றன. அந்தவகையில்,

அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கு ஏற்ப, இப்றாஹீம் நபி அவர்கள் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்தவர்களாக தனது மனைவி ஹாஜரா, மகன் இஸ்மாயில் (அலை) ஆகியோரை யாருமற்ற பாலைவனத்தில் தனியாக விட்டுச்செல்லல், தனது அருமைப் புதல்வன் இஸ்மாயில் (அலை) அவர்களை தியாகம் செய்யத் துணிதல், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு தயக்கமின்றி அடிபணிதல், விசுவாசம் கொள்ளல், தனது கஷ்டங்களுக்காக அல்லாஹ்விடமே உதவி தேடுதல் போன்ற சம்பவங்கள் நமது வாழ்க்கைக்கான சிறந்த படிப்பினைகளாகவே உள்ளன. இவ்வுலக வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளை பூரண இறைநம்பிக்கை இருந்தால், இலகுவில் வெற்றிகொள்ளலாம் என்ற படிப்பினையையும், தியாக மனப்பான்மையை எவ்வாறு வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இந்த மாதம் நமக்கு கற்றுத் தருகின்றது.

மேலும், துல் ஹஜ் மாதத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்பவர்கள் தமது குடும்பம், உறவினர்கள், தொழில், நாடு, சொத்துக்கள் என அனைத்தையும் துறந்து இந்த புனித பயணத்தில் ஈடுபடுகின்றனர். இந்த செயலானது, இறை திருப்தி, இறையச்சம், பாவமன்னிப்பு போன்ற படிப்பினைகளை வழங்குகின்றது. அத்துடன், ஹஜ்ஜின்போது உலகின் சகல பாகங்களிலிருந்தும் மக்கள் வருவதனால், அங்கு நிற பேதம், அந்தஸ்து, ஆளுமை போன்ற சகலவிதமான பேதங்களையும் மறந்தவர்களாகவே அவர்கள் ஒன்றுகூடுகின்றனர். இது, மக்களுக்கிடையில் ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம் என்பனவற்றை ஏற்படுத்துவதாக அமைகின்றது.







## அய்யாமுத் தஷ்ரீக்

'அய்யாமுத் தஷ்ரீக்' என்பது, துல் ஹஜ் மாதத்தில் ஹஜ்ஜுப் பெருநாளை அடுத்து வரும் 11,12,13 ஆகிய நாட்களைக் குறிக்கும். பெருநாள் தினத்தன்றும் தஷ்ரீக்குடைய நாட்களிலும் நோன்பு நோற்பது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்களில் உழ்ஹிய்யா (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற ஏதாவதொன்றை அறுத்துப் பலியிடுதல்) கொடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களைப் போன்றே, அதனையடுத்து வருகின்ற இந்த மூன்று நாட்களிலும் குர்ஆன் ஓதுவது, தொழுகைகளை நிறைவேற்றுவது, திக்ர் செய்வது, ஏழைகளுக்கு தர்மம் செய்வது, தீமையை தடுத்து வாழ்தல் போன்ற நன்மையான காரியங்களில் ஈடுபடுவது அல்லாஹுத்தஆலாவுக்கு மிகவும் விருப்பமானதாகும். எனவே, நாம் இந்த நாட்களை நன்மையான காரியங்களில் கழித்து, அவற்றை முழு வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வழியமைத்துக் கொள்வோம்.

அனைவருக்கும்
புனித ஹஜ்ஜுப் பெருநாள்
நல்வாழ்த்துக்கள்

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் நண்பர்களுக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

කමල්: නිවාඩුත් ඉවර වුණා නේද?
நிவாடுத் இவர வுணா நேத?
**கமல்: விடுமுறையும் முடிந்துவிட்டது அல்லவா?**

වසන්ත: ඔව්නේ. නිවාඩු කාලේ ඉක්මණින් ගෙවුණා.
ஒவ்னே. நிவாடு காலே இக்மணின் கெவுணா.
**வசந்த: ஆம். விடுமுறைக் காலம் வேகமாகக் கழிந்துவிட்டது.**

රාජා: ඔයා නිවාඩු කාලේ මොනවද කළේ වසන්ත?
ஒயா நிவாடு காலே மொனவத களே வசந்த?
**ராஜா: நீங்கள் விடுமுறைக் காலத்தில் என்ன செய்தீர்கள் வசந்த?**

වසන්ත: අපි අනුරාධපුරේ ගියා. ඔයාලා මොනවද කළේ?
அப்பி அநுராதபுரே கியா. ஒயாலா மொனவத களே?
**வசந்த: நாம் அநுராதபுரம் சென்றோம். நீங்கள் என்ன செய்தீர்கள்?**

කමල්: අපි සරුංගල් තරඟයකට සහභාගි වුණා.
அப்பி சருங்கல் தரங்கயகட்ட சஹபாகி வுணா.
**கமல்: நாம் பட்டம் விடும் போட்டியொன்றில் கலந்துகொண்டோம்.**

වසන්ත: ඇත්තද? කවුරු කවුරුද?
எத்தத? கவுரு கவுருத?
**வசந்த: அப்படியா? யார் யாரெல்லாம்?**

රාජා: මායි කමලුයි සරතුයි එකතු වෙලා ලස්සන සරුංගලයක් හදල යැව්වා.
மாய் கமலுய் சரதுய் எகது வெலா லஸ்ஸன சருங்கலயக் ஹதல யெவ்வா.
**ராஜா: நானும் கமலும் சரத்தும் இணைந்து அழகானதொரு பட்டம் செய்து அனுப்பினோம்.**

කමල්: ඔව්.. අපේ සරුංගලයට දෙවෙනි ස්ථානය ලැබුණා.
ஒவ்... அப்பே சருங்கலயட்ட தெவெனி ஸ்தானய லெபுனா.
**கமல்: ஆம்... எங்கள் பட்டத்திற்கு இரண்டாம் இடம் கிடைத்தது.**

වසන්ත: මමත් ළඟ සිටියා නම් එකතු වෙනවා.
மமத் லங்க சிட்டியா நம் எகது வெனவா.
**வசந்த: நானும் கிட்ட இருந்திருந்தால் உங்களோடு இணைந்திருப்பேன்.**

රාජා: ඒක තමයි. ඔයා ඉන්නේ දුරනේ.
ஏக தமய். ஒயா இன்னே துரனே.
**ராஜா: அது தான். நீங்கள் தூரத்தில்தானே இருக்கிறீர்கள்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. விடுமுறையும் முடிந்துவிட்டது.
 ..............................................
2. நாம் அநுராதபுரம் சென்றோம்.
 ..............................................
3. பட்டம் செய்து அனுப்பினோம்.
 ..............................................




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

நிகழ்கால வினைமுற்று வாக்கியம் (Present perfect tense) மற்றும் இறந்தகால தனி வாக்கியம் (Past simple tense) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களையும், தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலைக்கு மாற்றியமைக்கும்போது, அந்த இரண்டு வகை வாக்கியங்களும் இறந்தகால வினைமுற்று வாக்கியங் களாக (Past perfect tense) அமைய வேண்டும் என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

★ **நிகழ்கால வினைமுற்று வாக்கியம்**
**Present perfect tense**

அ) Ravi said, "I have bought a new pen."
ரவி கூறினான், "நான் புதியதொரு பேனா வாங்கியுள்ளேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஆ) Ravi said that he had bought a new pen.
தான் புதிய பேனா ஒன்று வாங்கியுள்ளதாக ரவி கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ **இறந்தகால தனி வாக்கியம்**
**Past simple tense**

இ) Ravi said, "I bought a new pen on Wednesday."
ரவி கூறினான், "நான் புதன் அன்று புதிய பேனா ஒன்று வாங்கினேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஈ) Ravi said that he had bought a new pen on Wednesday.
தான் புதன் அன்று புதிய பேனா ஒன்று வாங்கியதாக ரவி கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ **மேற்படி (அ மற்றும் இ) தன் கூற்று வாக்கியங்களின்படி;**

அ) I have bought - நான் வாங்கியுள்ளேன்.
(Present perfect tense - நிகழ்கால வினைமுற்று)

இ) I bought - நான் வாங்கினேன்.
(Past simple tense- இறந்தகால தனி வாக்கியம்)

★ **நிகழ்கால வினைமுற்று வாக்கியம்**
**(Present perfect tense)**

உ) Radhi said, "I have answered the questions."
ரதி கூறினாள், "நான் வினாக்களுக்கு விடையளித்துவிட்டேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஊ) Radhi said that she had answered the questions.
தான் வினாக்களுக்கு விடையளித்துவிட்டதாக ரதி கூறினாள்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ **இறந்தகால தனி வாக்கியம்**
**(Past simple tense)**

எ) Radhi said, "I answered the questions properly."
ரதி கூறினாள், "நான் வினாக்களுக்கு முறையாக விடையளித்தேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஏ) Radhi said that she had answered the questions properly.
தான் வினாக்களுக்கு முறையாக விடையளித்ததாக ரதி கூறினாள்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல்ட் - ஃபாரா

# இருவரதும் இறுதிப் போட்டியை காண ரசிகர்கள் முண்டியடிப்பு






உலகப்புகழ் தடகளப் போட்டி வீரர்களான ஒலிம்பிக்கில் 9 தங்கப் பதக்கங்களை வென்ற குறுந்தூர ஓட்ட வீரரான ஜெமெய்க்காவின் உசேன் போல்ட் மற்றும் பிரிட்டனின் நெடுந்தூர ஓட்டவீரர் மோஃபாரா ஆகிய இரண்டு பேரினதும் இறுதிப் போட்டியை கண்டு களிப்பதற்காக, பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் முண்டியடிப்பதாக செய்திகள் வெளியாகின்றன.

உலக தடகள செம்பியன்ஷிப் போட்டிகள் 2017 ஓகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிவரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியே உசேன் போல்ட் மற்றும் மோஃபாரா ஆகிய இரண்டு பேரினதும் திறமைகளை ரசிகர்கள் காண்பதற்கான இறுதி வாய்ப்பாகும். ஆகையினால் இதற்கான டிக்கெட்களை வாங்குவதற்கு கடும் போட்டி நிலவி வருகின்றது.

பத்து லட்சம் டிக்கட்களில் 7 லட்சம் டிக்கட்கள் ஏற்கனவே விற்றுத் தீர்ந்துவிட்ட நிலையில், மிகுதி டிக்கட்களை கொள்வனவு செய்வதற்கு கடும் போட்டி நிலவி வருகின்றது. அதிக எண்ணிக்கையிலான ரசிகர்களுக்கு வாய்ப்பை வழங்குவதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்தும் ஏற்பாட்டாளர்கள் சிந்தித்து வருகின்றனராம்.

விஜய் ஸ்போர்ட்ஸ்

## டெஸ்ட் அணிகளை பிரிப்பதற்கு எதிர்ப்பு

உலகில் டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள அணிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பது தொடர்பில் ஆராயும் சந்திப்பொன்று சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமையகம் அமைந்துள்ள டுபாயில் நடைபெற்றது. ரசிகர்களின் கூடிய கவனத்தை ஈர்ப்பதற்காகவும், போட்டித்தன்மையை அதிகரிப்பதற்காகவும் எனக் கூறியே டெஸ்ட் நாடுகளை இவ்வாறு இரண்டு அணிகளாகப் பிரிப்பதாக கூறப்பட்ட போதிலும், முற்று முழுதாக தொலைக்காட்சி ஒளிபரப்பின்மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தை சுவீகரிக்கும் முன்னணி நாடுகளின் திட்டமே இது என்றும் கூறப்படுகின்றது. எனவே, இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய நாடுகள் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.




## 'டங்கன் வைட்' மண்டபம் பெயர் சூட்டப்பட்டது

கொழும்பு, ரீட் வீதியில் அமைந்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சில் அமைக்கப்பட்டுள்ள 'கேட்போர்' கூடத்திற்கு 'டங்கன் வைட் மண்டபம்' என பெயரிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருட காலப்பருவத்தில் இலங்கையில் விளையாட்டுத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம், வளர்ச்சி குறித்தும் அதற்கு பங்காற்[illegible]வர்களை ஊக்குவித்து, கௌரவிக்கும் பொருட்டு கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் கடந்த 17 ஆம் திகதியன்று சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த விழாவின்போதே, குறித்த மண்டபத்திற்கு 'டங்கன் வைட் மண்டபம்' என்ற பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, விளையாட்டுத்துறையில் சர்வதேச மட்டத்தில் திறமைகளைக் காட்டிய வீர, வீராங்கனைகள், பயிற்றுனர்கள் ஆகியோருக்கு பணப்பரிசில்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மெத்யூஸ் ஒரு மாத ஓய்வில்



இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் என்ஜலோ மெத்யூஸ் உடல் உபாதைக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக, அவருக்கு ஒரு மாத கால ஓய்வு தேவை என்று மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர். அவுஸ்திரேலியாவுடனான நான்காவது ஒருநாள் போட்டியின்போது, கால் பாதத்தில் ஏற்பட்ட தசைப் பிறழ்வின் காரணமாகவே, மேற்படி உபாதைக்கு அவர் உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

## தெரிந்து கொள்வோம்

★ 'பொலிமர்' நாணயத்தாள்கள் பயன்பாட்டிலுள்ள பிரதான நாடு எது?

அவுஸ்திரேலியா



★ ஹரிபொட்டர் நூலின் ஆசிரியரின் இயற்பெயரும் புனைபெயரும் எவை?

i. இயற்பெயர் - ஜோஆன் ரோவ்லிங்
ii. புனைப்பெயர் - ஜே.கே.ரோலின்



★ அண்டவெளி கிரகங்களின் பயண விதிகளை முதன்முதலில் வரையறுத்த விஞ்ஞானி யார்?

சேர்.ஐசக் நியூட்டன்



★ பின்வரும் புனைப்பெயர்களில் மறைந்துள்ள இலக்கியப் படைப்பாளிகளின் இயற்பெயர்களை தருக?



i. பாரதிதாசன் - கனக சுப்புரத்னம்
ii. கவிஞர் கண்ணதாசன் - முத்தையா
iii. சுஜாதா - எஸ்.ரங்கராஜன்
iv. புதுமைப் பித்தன் - சொ.விருத்தாசலம்



★ இலங்கையிலிருந்து லண்டனின் கோ மறைக் கழக உறுப்பினராக நியமனம் பெற்ற முதலாவது இலங்கையர் யார்?

டி.எஸ்.சேனநாயக்க

★ இலங்கையின் சபாநாயகராக பதவி வகித்த தமிழர் யார்? அவர் எந்த ஆண்டு நியமனம் பெற்றார்?

சேர்.வைத்தியலிங்கம் துரைசாமி (1936-1947)



★ 'ஆலம் கீர்' என்று அழைக்கப்பட்ட இந்திய மன்னன் யார்?

ஔரங்க சீப்

-தொகுப்பு: உடுநிலை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெயில், மழை, பனியிலிருந்து பாதுகாக்கும் தொப்பி ஒன்று செய்வோம்



திறந்தவெளிகளில் விளையாடுவது பிள்ளைகளுக்கு மிகவும் விருப்பமான விடயமாகும். ஆனால், இதன்போது வெயில், மழைத்தூறல், பனி என்பனவற்றிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதும் அவசியமாகும். இதற்காக, அவர்களையும் இணைத்துக்கொண்டு ஒரு தொப்பியினை தயாரிப்போம்.

மெழுகு கலந்த துணி அல்லது கடதாசியினைப் பயன்படுத்தி இந்த தொப்பியை தயாரிப்பதால் மழை, வெயில், பனி ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு பெற முடியும்.

### தேவையானவை:

★ மெழுகு கலந்த துணி அல்லது கடதாசி
★ நன்கு ஒட்டும் பசை
★ கத்தரிக்கோல்
★ பஞ்ச்சர்
★ ஹோல்டிங் பின்

### தயாரிப்பு முறை:

★ 1 ஆம், 2 ஆம் படங்களில் உள்ளவாறு மாதிரியை வரைந்து வெட்டிக்கொள்ளுங்கள்.


★ 3 ஆம் படத்தின்படி வெட்டப்பட்ட மாதிரியின் நுனிப்பகுதிகளில் துளையிட்டுக் கொள்ளுங்கள்.

★ 4 ஆம், 5 ஆம் படங்களில் காட்டப்பட்டுள்ளவாறு வெட்டிய மாதிரியின் கோணங்களை ஒன்றிணைத்து நடுவில் ஹோல்டிங் பின்னைப் பொருத்துங்கள்.

★ இப்போது தொப்பியின் தலைப்பகுதி தயாராகிவிட்டது. (படம் 6)

★ அடுத்து தொப்பியின் முகப்புப் பகுதியினை அமைப்பதற்காக 7 ஆம் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு மாதிரியை வெட்டி எடுத்து அதில் பசை பூசுங்கள்.

★ 8 ஆம் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தலைப்பகுதியுடன் அதனை ஒட்டிக்கொள்ளுங்கள்.











உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நேரம் என்ன?




பிரதான படத்திலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான படத்தை வெட்டி ஒட்டுக



குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து எழுதுங்கள்


p a e l p


i a n o p


a n c


r a c



a s r t

படத்திற்குரிய சரியான சொல்லில் வட்டமிடுங்கள்



| | | |
|---|---|---|
| See Sea | Scent Cent | Night Knight |
| Rows Rose | Bore Boar | Hare Hair |
| Meet Meat | Sail Sale | Ate Eight |
| Write Right | Buy Bye | In Inn |

குறுக்கெழுத்துப் போட்டி: 205



### மேலிருந்து கீழ்

01. அந்தரங்கம்.
02. உலர வைத்த உணவு.
04. அக்கறை. (குழம்பியுள்ளது)
05. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர். (தலைகீழ்)
06. மரம் வெட்டவும் மரக்குற்றிகளைப் பிளக்கவும் பயன்படும் கருவி. (தலைகீழ்)


### இடமிருந்து வலம்


01. இராமர், இந்த வம்சத்தைச் சேர்ந்தவர் ஆகக் கருதப்படுகின்றார்.
03. சிறிய தாயார்.
04. யானை.
05. 'இன்று' என்பதன் கடந்தகாலம். (மாறியுள்ளது)

குறுக்கெழுத்துப் போட்டி: 204 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வா | ட | கை | | சி | 2 பா |
| த் | | | 3 மெ | ட் | டி |
| 4 து | 5 கி | ல் | | 6 க | ளி |
| | ண் | ணி | 7 அ | | |
| சை | கி | 8 அ | ம் | | ரு |
| 9 தோ | ணி | | மை | ரு | 10 ஏ |

அறிவுக்கு விருந்து (31.08.2016) விடைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







விஜய் விழா உலா
த.பெ. என் 2037
கொழும்பு





மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட விளையாட்டு விழா அண்மையில் மட்டக்களப்பு பாட்டாளிபுரம் மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் என்.மதிவண்ணன் மற்றும் பிரதேச செயலாளர்கள் அமர்ந்திருப்பதையும், கயிறிழுத்தல் போட்டியில் முதலிடத்தினைப் பெற்ற ஏறாவூர் பற்று பிரதேச வீராங்கனை ஒருவர் பரிசு பெறுவதையும், மேலும் பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர், உதவிப் பிரதேச செயலாளர், விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் வெற்றிக் கிண்ணம் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படம்: பழுலுல்லாஹ் பர்ஹான்)

# மிகவும் அபாயகரமான பழங்குடி இனம்

உலகில் 100 வகையான பல்வேறுபட்ட பழங்குடி இனங்கள் வாழ்கின்றன. இவர்களின் குண இயல்புகள் மிகவும் மாறுபட்டவை. அனேகமாக, இவர்கள் நாகரிக மக்களை மிக அதிகமாகவே வெறுக்கின்றனர்.



அடர்ந்த காடுகளின் உட்பகுதிகளிலேயே தமது வாழ்விடங்களை இவர்கள் அமைத்தும் உள்ளனர்.

இவ்வாறே, சாதாரணமாக எவரும் இலகுவில் அணுக முடியாத-மிகவும் பயங்கரமான பழங்குடி இனம் ஒன்று உலகில் வாழ்கின்றது. இவர்கள் தாம் வாழும் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் எவராவது புகுந்தால் அவர்களை உயிருடன் விட்டு வைப்பதில்லை. இந்தப் பழங்குடி இனம் சென்றீனஸ் பழங்குடி இனம் என அழைக்கப்படுகின்றது. இவர்கள் சென்றீனஸ் எனும் தீவிலேயே வாழ்கின்றனர். இது இந்தியாவுக்குச் சொந்தமான தீவாகவும் உள்ளது. இத்தீவு இந்தியாவுக்கு தென் கிழக்கே தனிமையில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.








எம்.முபீதா,
அல்-மக்கியா மு.ம.வித்., இரத்தினபுரி.



கே.ஹாரணி,
மமா/ஹல/கங்கேவத்தை
த.வித்.,
மஸ்கெலியா.



ஏ.பர்வேஸ்,
சாஹிரா கல்., சாய்ந்தமருது.




ஹாலி-எல பின்ஸ்லேண்ட் டிவிசனைச் சேர்ந்த கதிர்வேல்-நாகநந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வி பத்மலோஷனி, தனது ஆறாவது பிறந்த தினத்தை (15.09.2016) அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ஜெயகலா)



வி.சாருஜனா,
நு/கோட்லொஜ்
கந்தப்பளை
த.வித்., கந்தப்பளை.



எம்.முஜாஹித்,
மடப்பொக்குன சாஹிரா
மு.வித்., மஹல.



எம்.முஹம்மத்,
க/ஹனபிம நோயல் கல்.,
போகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈரானின் இரத்த ஏரியின் மர்மம்








ஈரானின் அஸர்பைஜான் எல்லைக்கு அருகாமையில் உள்ள உர்மியா ஏரியானது, தற்போது சுற்றுலாப் பயணிகளை பெருமளவில் கவர்ந்து வருகின்றது. இந்த ஏரி சில காலமாக நீலம், பச்சை நிறங்களில் மாறி அழகாக காட்சியளித்தாலும் தற்போது இந்த ஏரியானது இரத்தம் போன்று சிவப்பு நிறமாக மாறியுள்ளது. இதனை ஈரானின் இரத்த ஏரி என்றும் அழைக்கின்றனர்.

## சிவப்பு நிறம்

2,800 மைல்கள் சதுரப் பரப்புக் கொண்ட இந்த சிவப்பு நிற ஏரியினை விண்வெளியில் இருந்து பார்க்கும்போது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. அத்தோடு, இந்த ஏரி யுனெஸ்க்கோ அமைப்பினால் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## செய்மதியிலிருந்து கண்காணிப்பு

உர்மியா ஏரியின் நிறம் வருடத்தில் ஏப்ரல் முதல் ஜுலை அல்லது ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் மட்டுமே நிற மாற்றம் அடைகின்றது. கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி முதல் ஜுலை 18 வரையிலான காலப்பகுதியில் செய்மதி மூலம் பெறப்பட்ட புகைப்படங்களின் படி ஏரியில் நிற மாற்றம் நிகழும் விதம் தெளிவாகப் புலப்படுகின்றது.

## சிவப்பு நிறமாக காரணம்

நீர் மட்டம் குறைவடைகின்ற போதே இந்த நிறமாற்றம் நிகழ்கின்றது. ஈரான் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்குரிய நாடு என்பதனால் அதிகளவு வெப்ப அதிகரிப்பு ஏற்படுகின்றது. இந்த வெப்பநிலை மாற்றத்தால், சிவப்பு நிறமான ஒருவகை பாசி இந்த ஏரியில் படர ஆரம்பிக்கின்றது. இந்த பாசி வகை 'டுனலைலா சலீனா' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. வெப்பநிலை அதிகரிக்கும் போது இந்த பாசி துரித கதியில் வளர்ச்சி அடைந்து ஏரி முழுவதும் பரவிவிடுகின்றது. இவ்வாறு தான் ஏரியில் சிவப்பு நிறம் படர்கின்றது.

## எச்சரிக்கை

'டுனலைலா சலீனா' அதிகளவில் வளர்கின்றதாயின் அதற்கு உலகளாவிய வெப்பநிலையே காரணம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு உர்மியா ஏரியின் நிறம் மாறுவது மனிதர்களுக்கான ஓர் அபாய அறிவிப்பாகவே கருதப்பட வேண்டும் என்று விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

(-இ)

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ **Practical English Learning Software DVD**



★ **4000 English Letter Writing Software**



★ **8 GB Pen Drive**



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ்

போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*31.08.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*

**நுளம்பு**

**Pendrive** வெற்றியாளர்:
கு.மதுஷாளினி,
'வதனி வாசா',
புற்றளை, புலோலி தெற்கு, பருத்தித்துறை.

**'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை**

Write Message

**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

Pen Drive போட்டி
(14.09.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
**14.09.2016**


விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................

..................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# மெதிரிகிரிய வட்டதாகே





மெதிரிகிரிய தாகபம் பொலனறுவை மாவட்டம் தம்மன்கடுவை பிரதேசத்தில் அமைந்துள்ளது. மெதிரிகிரிய வட்டதாகே உடன் தொடர்புடைய முதலாவது வரலாற்றுத் தகவல் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி கி.பி. 164 முதல் 192 வரை அநுராதபுரத்தில் ஆட்சி செய்த கனிட்டதிஸ்ஸ மன்னனால் மண்டலகிரி விகாரையில் பௌத்த மத புண்ணிய கருமங்கள் பல மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் முதலாம் கஜபாகு மன்னனின் ஆட்சிக் காலத்துக்குரிய உடலை வருத்தும் தண்டனைகளை அக்கால நீதிமுறையிலிருந்து நீக்க சட்டமியற்றியதனால் 'வொகாரிக' என்ற அடைமொழியைப் பெற்றான். இவ்வாறு 28 வருடங்களாக நாட்டை அமைதியான முறையில் நல்லாட்சி புரிந்த மன்னனே கனிட்டதீஸ்ஸ மன்னன் ஆவான்.

வட்டதாகேயின் மத்தியில் பல தூண்கள் உள்ளன. வட்டதாகேயின் கீழ்ப் பகுதியின் விட்டம் 26 அடியாகும். இது மிகவும் பழமையானதாகும். இதனை பாதுகாப்பதற்காக சுற்றி எழுப்பப்பட்ட கட்டடத்தை விட இது 800 ஆண்டுகள் பழமையானதாகும்.

மெதிரிகிரியவுடன் தொடர்புடைய இரண்டாம் வரலாற்று நிகழ்வு நான்காம் அக்ரபோதி மன்னன் (கி.பி 677-683) காலத்தில் நிகழ்ந்ததாகும். அவனது ஆட்சிக்காலத்தில் விகாரையின் சிறிய தூபிக்கு வட்டதாகே ஒன்று கட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழரின் படையெடுப்புடன் தலைநகரம் அநுராதபுரத்தில் இருந்து பொலனறுவைக்கு மாற்றப்பட்டமையால் மெதிரிகிரிய உள்ளிட்ட பல வழிபாட்டுத் தலங்கள் கவனிப்பாரற்று கைவிடப்பட்டன. பின் சோழரை தோற்கடித்து முதலாம் விஜயபாகு மன்னன் (கி.பி. 1070-1110) பொலனறுவையின் மன்னனாக முடிசூடிய பின் பாழடைந்துபோயிருந்த மெதிரிகிரிய விகாரையை மீண்டும் புனருத்தாரனம் செய்து அதனை மேலும் சிறப்பாக நிர்வகிக்க சில கிராமங்களை கையளித்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.


- அ













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாதப் பொருளாக மாறிய தொலைக்காட்சி



இலங்கை போன்ற நாடுகளில் தொலைக்காட்சி அறிமுகமாகிய உடனேயே ஏராளமானவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக ஆர்வம் காட்டிய அதேவேளையில் நாள் செல்லச் செல்ல தொலைக்காட்சி பார்ப்பதால் நன்மையா? தீமையா? என்ற ஒரு விவாதப் பொருளை தோற்றுவிக்கும் அளவிற்கு தொலைக்காட்சியினால் நன்மை தீமை இரண்டும் ஏற்படத் தொடங்கியது. இதேவேளை, தொலைக்காட்சியை பார்ப்பதால் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றதென்ற மருத்துவ ரீதியிலான தர்க்கங்களும் முன்வைக்கப்பட்டன.

மருத்துவ ஆய்வுகளின்படி, நீண்ட நேரம் தொலைக்காட்சியைப் பார்ப்பதால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றதென்பது நிரூபணமாகியமையால்



இதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. தொலைக்காட்சியிலிருந்து ஒளி அலைகளுடன் ஒருவித கதிர்வீச்சு வெளிவருவதனால் அது கண்களைத் தாக்குவதாலேயே, இந்த பாதிப்பு ஏற்படுவதாக கண்டறியப்பட்டது. எனவே, தொலைக்காட்சிப் பெட்டியிலிருந்து பத்தடி தூரம் தள்ளியிருந்து தொலைக்காட்சியைப் பார்க்குமாறும் ஒரே இடத்திலிருந்து நீண்ட நேரம் தொலைக்காட்சியைப் பார்க்க வேண்டாம் என்றும், அறையில் மின் விளக்குகளை அணைத்துவிட்டு தொலைக்காட்சி பார்க்க வேண்டாம் என்றும், மின்குமிழ்களை ஒளிரச் செய்தவாறே தொலைக்காட்சியை பார்க்குமாறும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. இவை நீண்ட பிரச்சாரமாகவும் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, ஆரம்ப காலத்தில் மக்களுக்கு இதுவொரு குழப்பகரமான மனநிலையை தோற்றுவித்தபோதிலும் நாளடைவில் இந்த ஆலோசனைகளில் சிலவற்றை மக்கள் பின்பற்றத் தொடங்கினர். மேலும், நாள் செல்லச் செல்ல தொலைக்காட்சியானது, மக்களை முழுமையாக ஆக்கிரமித்ததையடுத்து இவையெல்லாம் மக்களுக்கு சாதாரண விடயமாக மாறியது. இத்தகைய சக்திமிகு சாதனமாக மாறிய தொலைக்காட்சியானது, மக்களால் தள்ளி வைக்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது.

(தொடரும்)

-ரிஷபன்


ஊடக பாடநெறி பாகம்-II பாடம் - 121

---


உலகில் பிரபல்யமானவர்கள்

# கார்ல் பெர்டினாண்ட் பிரவுன்

கம்பியற்ற தகவல் தொடர்பு முறை வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற தொழில் நுட்பத்திற்கு வித்திட்டவர்தான் கார்ல் பெர்டினாண்ட் பிரவுன் ஆவார். இவர் 1850 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6 ஆம் திகதி ஜேர்மனியில் பிறந்தார். இவர் இளமையில் கல்வி ஆர்வம் மிக்கவராகவும் அறிவியலில் மிகச் சிறந்த திறமை வாய்ந்தவராகவும் திகழ்ந்தார். 1874 ஆம் ஆண்டு ஆசிரியராக பணியாற்றத் தொடங்கிய இவர், 1895 ஆம் ஆண்டளவில் ஸ்ட்ராஸ்பர்க் பல்கலைக்கழகத்தின் முதல்வராக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.



இவருடைய ஆய்வுப் பணிகளானது,



மின்னியலைப் பற்றியதாகவே காணப்பட்டது. அத்தோடு, காரீய சல்பைட் கலந்த குறை மின் கடத்தியான கலினா என்ற படிகத்தினை இவரே கண்டுபிடித்தார். இதுவே முதல் குறை மின்கடத்தியாகும். இதனை தொடர்ந்து, 1898 ஆம் ஆண்டில் கம்பியில்லாத் தந்தி முறை பற்றி ஆய்வுகளை மேற்கொண்டார். இதன் பயனாக 1902 ஆம் ஆண்டளவில் "நீரிலும், காற்றிலும் கம்பியில்லாத் தந்திமுறை" என்ற தலைப்பில் விவரக் கட்டுரையை எழுதி வெளியிட்டார். அதன் பின்னர் இவரின் கம்பியில்லாத் தந்தி முறைக்கு 1909 ஆம் ஆண்டு நொபெல் விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இயற்பியலுக்கு தொண்டாற்றிய இவர் 1918 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

---

## எம்மைத் தெரியுமா?

ஆரவாரம் இல்லாமல் அணிவகுப்போம்,
ஓயாது நாம் உழைப்போம். எம்மைத் தெரியுமா?
விடை: எறும்புக் கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்
யாழ்ப்பாண

# உலகின் மிகப் பெரிய வழிபாட்டுத்தலம்

உலகிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களில், மிகப் பெரியது கம்போடியாவிலுள்ள அங்கோர் வாட் ஆலயமாகும். இந்த வழிபாட்டுத்தலமானது, 401 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. கெமர் பேரரசு நிலவிய காலத்தில் கட்டப்பட்ட இந்த வழிபாட்டுத்தலம், அப்போது இந்துக் கோயிலாகவே இருந்தது. காலப்போக்கில், இது பௌத்த வழிபாட்டுத்தலமாக மாறியது.





# பசி ஏன் ஏற்படுகிறது?

பசி என்பது, அனைத்து உயிரினங்களுக்கும் ஏற்படக்கூடிய ஓர் இயற்கை உணர்வு ஆகும். உடல் உழைப்பு அதிகரிக்கும்போது, பசி உணர்வும் ஏற்படும். சிலவேளைகளில், வேலைகள் எதுவும் செய்யாத நிலையிலும்கூட பசி ஏற்படுவதை உணர்வீர்கள். இதற்குக் காரணம், நாம் உடலை அசைத்து வேலை செய்யாமல் இருந்தாலும், நமது உடலில் குருதிச்சுற்றோட்டம் மற்றும் சுவாச செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றமையினால் ஆகும்.



உயிரினங்களின் உடலில் சுரக்கின்ற லெப்டின், க்ரெலின் போன்ற ஹோர்மோன்களே பசி உணர்வை ஏற்படுத்துகின்றன. பசி உணர்வானது, எறும்பு மற்றும் சிலந்தி போன்ற உயிரினங்களில் சுறுசுறுப்புத் தன்மையையும் உடல் இயக்கத்தையும் அதிகரிப்பதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# வேகமான பறவை




பறவையினங்களில், மிகவும் வேகமாக பறக்கும் பறவையினமாக 'பெரிக்ரின் வல்லூறு' (Peregrine falcon) கருதப்படுகின்றது. இப்பறவையினம் மணிக்கு 389 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. அத்துடன், தரையில் ஒரு இரையைக் கண்டால், மணிக்கு 322 கிலோமீற்றர் வேகத்தில் செங்குத்தாகப் பறந்து வந்து அதனை இரையாகப் பிடித்துக்கொள்ளும் ஆற்றலையும் இது கொண்டுள்ளது. Falconidae எனும் பறவைக் குடும்பத்திற்குரிய பெரிக்ரின் வல்லூறு, கழுகு இனத்தைச் சேர்ந்த ஊன் உண்ணிப் பறவையாகும். இதனை தமிழில் 'பொரி வல்லூறு' என்றழைப்பர். இந்த பறவைகள் தமது கூரிய நகங்களால் தம்மைவிட அளவில் பெரிய பறவைகள் மற்றும் விலங்குகளையும் கவ்விப்பிடித்து வேட்டையாடும் வல்லமை கொண்டவை.





# கோள்களின் விசித்திரம்

- ★ முதன்முதலாக கண்டறியப்பட்ட கோள் - புதன்
- ★ மிகப் பிரகாசமான மற்றும் மிக வெப்பமான கோள் - வெள்ளி
- ★ 'நீலக்கோள்' என அழைக்கப்படுவது - பூமி
- ★ சூரியனிலிருந்து மிகத் தொலைவிலுள்ள மற்றும் மிக குளிர்ச்சியான கோள் - நெப்டியூன்
- ★ 'செங்கோள்' என அழைக்கப்படுவது - செவ்வாய்
- ★ மிகப் பெரிய கோள் - வியாழன்
- ★ மிகச் சிறிய கோள் - புதன்
- ★ வளையங்களைக் கொண்ட கோள்கள் - வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன்
- ★ துணைக்கோள்கள் இல்லாத கோள்கள் - புதன், வெள்ளி




இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, செப்டெம்பர் 14 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 14, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org